# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 17, 2025

Weekly E-paper ●May 17, 2025





# குடியரசுத் தலைவரின் குறுக்கீடு!

சுப. வீரபாண்டியன்

## பொள்ளாச்சி பாலியல் குற்ற வழக்கும் நீதிமன்றத் தீர்ப்பும்!

சாரதாதேவி

## டொனால்ட் பேசுகிறார் மோடி பேசவில்லை

தலையங்கம்

## சமூகநீதி கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு நன்றி!

இல.இரவி

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 17, 2025 Weekly E-paper ● May 17, 2025

# குடியரசுத் தலைவரின் குறுக்கீடு!

**சுப. வீரபாண்டியன்**



தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட வடிவங்களை எந்தக் காரணமும், நியாயமும் இன்றி முடக்கி வைக்க முயற்சி செய்தார், தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி! அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றம் சென்றபோது, ஆளுநரின் பிழைகளை அம்பலப் படுத்தி, அந்த முன் வடிவங்களுக்கு உச்ச நீதிமன்றமே அனுமதி அளித்தது ! அதுமட்டுமல்லாமல், ஆளுநர் ஒரு கோப்பில் கையெழுத்து இடுவதற்குக் குறிப்பிட்ட கால வரையறை வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுரைத்தது !



அந்த அறிவுரையை எதிர்த்தும், கேள்வி கேட்டும் இந்தியாவின் குடியரசு தலைவர் ஒரு கடிதம் கொடுத்துள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டமே, எந்தக் கால வரையறையையும் சொல்லாத போது, உச்ச நீதிமன்றம் ஏன் அதனை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

ஆளுநர்கள் தங்கள் கடமைகளைச் செய்யாமல், இவ்வளவு மோசமாக நடந்து கொள்வார்கள் என்று அரசமைப்புச் சட்டத்தை எழுதியவர்கள் கருதி இருக்க மாட்டார்கள் என்பதுதான் உண்மை! ஆனால் இன்று நடைமுறையில் ஆளுநர்கள் இப்படி நடந்து கொள்ளத் தொடங்கிய பிறகு, அதனைச் சரி செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருதுவது எந்த விதத்தில் தவறு?

இந்தத் தவறுகள் திட்டமிட்டே செய்யப்படுகின்றன. எனவே இவற்றைச் சரி செய்து விடக் கூடாது என்று இந்திய ஒன்றிய அரசு கருதுகிறதா? அந்தக் கருத்தைத்தான் குடியரசு தலைவர் மூலம் திணிக்க முற்படுகிறதா?

இன்று வரையில் அரசமைப்புச் சட்டத்தில் அப்படி ஒன்று இடம் பெறவில்லை என்றால், சட்டத்தைத் திருத்தி, உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையை ஏற்று, கால வரையறையை முடிவு செய்வதுதானே நேர்மையான அரசின் நடவடிக்கையாக இருக்க முடியும்! அப்படிச் செய்யாமல், குடியரசு தலைவரின் மூலம் குறுக்கீடு செய்வது, மாநிலங்களின் உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்கும் முயற்சிதானே!

இந்தக் குறுக்கீட்டின் மூலம் வெளிப்படையாக ஓர் உண்மை புரிகிறது! ஒன்றிய அரசில் ஆட்சியில் அமர்ந்திருக்கும் பாஜக, தான் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மாநிலங்களிலும், மறைமுகமாக, தானே ஆள வேண்டும் என்று கருதுகிறது! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைப் புறந்தள்ளிவிட்டுத் தங்களால் நியமிக்கப்பட்ட ஆளுநர் மூலம் தங்கள் விருப்பப்படி ஆட்சி நடத்த வேண்டும் என்றும் திட்டமிடுகிறது!

இது ஜனநாயகத்திற்கும், மக்களின் உரிமைகளுக்கும் எதிரானது ! மாநில அரசுகளை வெறும் மாநகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும் திட்டம் இது! இதனை முறியடித்தே தீர வேண்டும்!

இதோ... எழுந்து நிற்கிறார், எங்கள் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் ! இந்தக் குறுக்கீட்டை எதிர்ப்போம், முறியடிப்போம் என்று அவர் முழங்கி இருக்கிறார்! அந்தக் குரல் தமிழ்நாடு முழுவதும் எதிரொலிக்கும் !

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!! ●

பொள்ளாச்சி

# பாலியல் குற்ற வழக்கும் நீதிமன்றத் தீர்ப்பும்!

சாரதாதேவி

*2019 பிப்ரவரி மாதம் தமிழ்நாட்டின் பொள்ளாச்சியில் கேட்டது “அண்ணா அடிக்காதீங்க அண்ணா” என்று ஒரு இளம்பெண்ணின் கதறல். அவரைப் போன்று அண்ணனாக நினைத்து நம்பி போன பல பள்ளி மற்றும் கல்லூரிப் பெண்களை கூட்டுச் சதி தீட்டி, தனியே வரச் செய்து, கூட்டாக வன்முறையால் பாலியல் குற்றங்கள் செய்ததோடு மட்டுமல்லாமல், அதை காணொளியாகப் பதிவு செய்து இருக்கின்றனர் அன்றைய அதிகார வர்க்கத்தினர்.*

*பாதிக்கப்பட்ட ஒரு பெண் தன் குடும்பத்தின் துணையோடு துணிச்சலாக காவல்துறையில் புகார் அளித்ததை அடுத்து 7 பெண்கள் புகார் அளித்தனர். இதில் பல ஆளுங்கட்சிப் புள்ளிகளின் குடும்ப “வாரிசுகள்” பெயர்கள் அடிபடவே வழக்கு பதியாமலும், புகார் அளித்த மாணவிக்கும், ஊக்கமளித்த அவருடைய அண்ணனையும் அச்சுறுத்தியும் பார்த்தனர் அன்றைய ஆளும் கட்சியினர். வழக்கு கொடுத்த பெண்ணின் பெயரைக் கூட சட்டத்துக்குப் புறம்பாக ஊடகங்களில் கசிய விட்டனர்.*

*தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, கம்யூனிஸ்ட் கட்சிகள், அகில இந்திய மாதர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு பெண்கள் அமைப்புகள் களத்தில் இறங்கி, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாகப் போராடியதால் வழக்கை சி.பி.ஐக்கு மாற்றினார் அன்றைய முதலமைச்சர் எடப்பாடியார். அடுத்து ஆட்சிக்கு தி.மு.க வரும். அப்போது தவறிழைக்கப் பட்டப் பெண்களுக்கு நீதியும், குற்றவாளிகளுக்குத் தண்டனையும் பெற்றுத் தரப்படும் என உறுதி அளித்தார் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின்.*

*சி.பி.ஐ இந்த வழக்கை மிகுந்த கவனத்துடனும், விஞ்ஞானப் பூர்வமாகவும் ஆதாரங்களைத் திரட்டி, 13 பிரிவிகளின் கீழ் வழக்கு பதிவு செய்து மூன்று குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்தது. மொத்தம் 48 சாட்சிகள், 206 ஆவணங்கள் ஆராயப்பட்டன. பாதிக்கப்பட்ட 8 பெண்களின் எந்தத் தகவலும்*




*வெளியே கசியாமலும், அவர்களுடைய தனியுரிமைக்கும், பாதுகாப்புக்கும், நற்பெயருக்கும் எந்த களங்கமும் ஏற்படாமலும் வாக்குமூலங்களை சேகரித்தது. குற்றஞ் சாட்டப்பட்டுக் கைதான இளைஞர்களை ஊடக சலசலப்புகள் இல்லாமல், காணொளி வாயிலாகவே விசாரணை செய்து, 50 கேள்விகளுக்கு அவர்களிடம் பதில்கள் பெறப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கும் இந்த 6 ஆண்டுகள் ஜாமீன் வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட ஒரு பெண்கூட பிறழ் சாட்சியாக மாறவில்லை. இந்திய அளவில் நிர்பயா வழக்குக்குப் பிறகு இத்தனை ரகசியமாகவும், இத்தனை நெடியதாகவும் நடத்தப்பட்டது இந்த வழக்குதான் என சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.*

*எவ்வளவோ அழுத்தங்கள், தலையீடுகள் இருந்திருந்தாலும் கோவை சி.பி.ஐ. நீதிமன்றத்தின் நீதியரசர் நந்தினி தேவி அவர்கள், கைதான 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்ததுடன், அவர்கள்*

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!
கருஞ்சட்டைத் தமிழர்

## டொனால்ட் பேசுகிறார் மோடி பேசவில்லை

பெகல்காமில் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட படுகொலைகளை மனிதநேயம் கொண்ட யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் இந்திய ஒன்றிய இராணுவம் பாக்கிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீது கடுமையான இராணுவத் தாக்குதலை நடத்தியது.

இந்திய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையின்படி இராணுவத்தாக்குதல் தீவிரவாதிகளின் முகாம்களின் மீது தானே ஒழிய, பாக்கிஸ்தான் இராணுவத்துடன் அல்ல என்பதைத் தெளிவாக்கியது. இதனை ஒன்றியம் முழுவதும் மக்கள் வரவேற்றார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மாபெரும் மக்கள் திரளைக் கூட்டிப் பேரணி நடத்தித் தம் ஆதரவினைத் தெரிவித்தார்.

இது ஒருபுறம் இருக்க சில நாள்களில் இப்போர் முடிவுற்ற நிலையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியா-பாக்கிஸ்தான் போரை நான்தான் நிறுத்தச் சொன்னேன். போரை நிறுத்தாவிட்டால் இருநாடுகளுடனும் வர்த்தகம் செய்வது நிறுத்தப்படும் என்று சொன்னதால் இருநாடுகளும் சம்மதித்து போரை நிறுத்தின என்று டிரம்ப் கூறியது இங்கு ஓர் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இதற்கு மறுப்பாக "இந்திய மற்றும் அமெரிக்கத் தலைவர்களிடையே வளர்ந்து வரும் இராணுவ நிலைமை குறித்து உரையாடல்கள் நடந்தன. வர்த்தகப் பிரச்சினை எந்த விவாதத்திலும் இடம்பெறவில்லை" என்று வெளியுறவு அமைச்சகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆனால் பிரதமர் மோடியோ, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரோ இதுகுறித்து வாய்திறக்காமல் மவுனமாக இருக்கிறார்கள். அண்மையில் அரபு நாடுகளுக்குச் சென்ற டிரம்ப் தொடர்ந்து இதையே சொல்லி வருகிறார்.



ஜம்மு-காஷ்மீர் பிரச்சனையில் அமெரிக்கா தலையிடக்கூடாது என்று எதிர்கட்சிகள் சொல்லிவரும் நிலையில், இன்று இந்தியா - பாக்கிஸ்தான் போரை வைத்து மூன்றாம் நாடான அமெரிக்கா தலையிடுகிறதா என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது டொனால்ட் டிரம்பின் தொடர் பேச்சுகள்.

இது குறித்து விவாதம் நடத்த வேண்டும், நாடாளு மன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று மோடியிடம் கேட்கிறார், நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி. நாட்டு மக்களுக்கும் உண்மை தெரியவேண்டும் அல்லவா!

டொனால் பேசுகிறார்,

மோடி மௌனமாக இருக்கிறார்.

வழக்கம்போல 'மௌனகுரு' வாக இருக்கும் பிரதமர் மோடி அவர்கள், விரைவில் தன் மௌனத்தைக் கலைப்பார் என்று நம்புவோமாக!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408


முன்பக்கத் தொடர்ச்சி...

அனைவருக்கும் சாகும்வரை ஆயுள் சிறை என்று அறிவித்தார் தன் தீர்ப்பை. அத்துடன் ரூ.85 லட்சம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கவும் தீர்ப்பளித்து இருக்கிறார்.

ஆண்ட சாதி, ஆண் சாதி, அமைச்சர் சாதி, ஆளுங்கட்சி சாதி என்றெல்லாம் இறுமாப்பாக ஆண் பிள்ளைகளை வளர்க்காமல், சக பெண்களையும் மனிதர்களாக, எல்லா மனிதர்களையும் பிறப்பு, தொழில் பேதங்களின்றி சமமாக நடத்தவும், இளமையில் கல்வியிலும், நற்பண்புகளிலும் பிள்ளைகளை வளர்க்க, வளர ஒரு பாடமாக இந்த வழக்கின் தீர்ப்பு அமையும் என நம்பலாம். தமிழ்நாடு பெண்கல்வியில், பெண்களின் தொழில் வாய்ப்பில், பணி எண்ணிக்கையில் என எல்லா முனைகளிலும் முன்னோடியாக இருக்க, பெண்களின் பாதுகாப்பிலும் உறுதியாக இருக்கும் என்ற ஒளிமயமான நம்பிக்கையை விதைத்திருக்கிறது நீதிமன்றம். நாமும் பாராட்டுவோம்! நீதியின் பக்கம் நிற்போம்!

# சமூகநீதி கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு நன்றி!

**இல.இரவி, தலைவர், தமிழ்நாடு பெஸ்ட் கூட்டமைப்பு**



அனுப்புநர்

பேராசிரியர் முனைவர். சுப. வீரபாண்டியன், பி.எச்.டி.,
தலைவர்,
சமூக நீதிக் கண்காணிப்புக் குழு,
2வது தளம், 735, தேவநேயப் பாவாணர் கட்டிடம், அண்ணா சாலை,
சென்னை 2.

பெறுநர்

1. முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 09.
2. தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 7வது தளம், டி.எம்.எஸ். கட்டடம், அண்ணா சாலை, சென்னை – 06.
3. தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், 3வது மற்றும் 4வது தளங்கள், புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரி சாலை, சென்னை – 600006.
4. தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண். 3, தேர்வாணைய சாலை, வ.உ.சி நகர், சென்னை – 600 003.

<u>கடித எண்.49/ சமூக நீதிக் கண்காணிப்புக் குழு /2025 நாள்: 21.04.2025</u>

அய்யா,

பொருள்: சமூக சீர்திருத்தத் துறை – சமூக நீதிக் கண்காணிப்புக் குழு – தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கூட்டமைப்பு – சங்கத்தின் சார்பாக கோரிக்கைகள் – தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண் 02 சமூக சீர்திருத்தத் துறை நாள்: 24.12.2021
2. தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கூட்டமைப்பு மனு நாள்: 01.04.2025.

*******

பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி கல்வி, வேலை வாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு அரசால் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை 2–இல் காணும் மனுவில் சேலம், தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கூட்டமைப்பு சார்பாக கூட்டமைப்பின் மாநிலத்

*சமூக நீதிக் காவலர் மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களால் 23 அக்டோபர் 2021 அன்று பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது "சமூக நீதி கண்காணிப்புக் குழு.*

இதன் நோக்கம் கல்வி, வேலைவாய்ப்பு, அரசு பதவி நியமனங்கள், பதவி உயர்வுகள், மகளிர் உரிமை, பெண்களுக்குச் சமூகப் பங்களிப்பில் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக முழுமையாக நடைமுறைப்படுவதை கண்காணித்து தமிழ்நாடு அரசுக்கு தேவையான பரிந்துரைகள் செய்யும்.

‘தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டமைப்பு’ குழு சார்பில் மாநிலத் தலைவர் இல.ரவி, மாநிலப் பொதுச் செயலாளர் செ.ராஜா, மாநிலப் பொருளாளர் A.V.சுரேஷ், மாநிலத் துணைச் செயலாளர் K.சித்தாத் குமார், நாமக்கல் மாவட்டத் தலைவர் T.K.செந்தில்குமார் ஆகியோர் 01-04-2025 அன்று தமிழ்நாடு சமூக நீதிக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை, அவரின் அலுவலகத்தில் சந்தித்து ஒரு கோரிக்கை மனுவை அளித்தார்கள். அப்போது எழில்.இளங்கோவன் உடன் இருந்தார்.



அம்மனுவில் SCA /SC/ST பிரிவுகளில் ஆயிரக்கணக்கான பின்னடைவு பணியிடங்கள் விரைவில் நிரப்ப வேண்டும், தமிழக அரசு அமைக்கும் மாநில, மாவட்ட ஆதி திராவிட நலக்குழு, நல வாரியங்கள், ஆணையங்கள், குழுக்களில் உறுப்பினர்கள் தேர்வில் தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும், ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலிகளாக பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் பெரும்பாலும் SC /SCA வகுப்பைச் சார்ந்தவர்களே இவர்களுக்கு காலமுறை ஊதியத்தில் நிரந்தர பணியாளர்களாக



நியமிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு இருந்தன. உடனடியாகச் சமூகநீதிக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அவர்கள் அனைத்து துறைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி இது சார்ந்த தகவல்களையும், துறை சார்ந்து மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் கேட்டு சம்பந்தப்பட்டத் துறைகளுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இக்கடித நகல் தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் அரசு ஊழியர்கள் கூட்டமைப்பின் தலைவர் அவர்களுக்கு அனுப்பி உள்ளது கண்காணிப்பு குழு.

கண்காணிப்புக் குழுத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் எடுத்த விரைவான நடவடிக்கைக்கு எங்கள் ‘தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், அரசு ஊழியர்கள் கூட்டமைப்பு’ சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

‘திராவிட மாடல்’ ஆட்சியில், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப் பட்ட ’சமூக நீதி கண்காணிப்புக் குழு’ வின் விரைவான நடவடிக்கை, கழக அரசின் செயல்பாட்டுக்கு ஓர் எடுத்துக் காட்டு என்றால் மிகையில்லை! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian